**திக்வெல்ல பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திக்வெல்ல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, திக்வெல்ல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 118,090 இற்கான கடன் தவணைகள் மற்றும் வட்டிக்காக பலவின கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் சனத் ஜயசூரியகம கிராமிய கரப்பந்தாட்ட திடலின் அபிவிருத்தி தொடர்பாக பெற வேண்டிய ரூபா 147,000 தொடர்பாக கடன்பட்டோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்குச் சொந்தமான பௌதீக ரீதியாக காணப்படாத ரூபா 4,494,435 தொகை பெறுமதியான பெக்கோ இயந்திரம் ஒன்று, இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கீழ் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 100,000 தொகை பெறுமதியான ருக்அத்தனகஹஹேன காணி, காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | முன்னைய ஆண்டுகளின் போது மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகளின் திருத்த வேலைக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3,243,435 தொகை மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் கணக்கில் மூலதனப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | பெற வேண்டிய நிர்மாணவேலைக் கடன்பட்டோர் ரூபா 364,443 இற்கான மீதியொன்று மற்றும் 3 நிர்மாணவேலை தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 452,356 இற்கான மீதியொன்று மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 நிதிக்கூற்றுக்களில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 1,988,648 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2008 ஆண்டு முதல் 2016 வரையான காலப் பகுதி தொடர்பாக நிலுவை பங்களிப்பு தொகைக்காக மாத்திரம் கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | 2019 ஆண்டில் மூடப்பட்டிருந்த சேமிப்புக் கணக்கொன்றின் மீதி ரூபா 360,340 தொகை என நிதிக் கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் மற்றும் ரூபா 1,391,977 தொகை பெறுமதியான பொருட்பதிவேட்டு தன்மையுடைய 261 விடயங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 நிதிக்கூற்றுக்களில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 05 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளில் இடையே ரூபா 222,845,934 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 114,027 இற்கான கணக்கு விடயம் ஒன்றினை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | அட்டவணைகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>நி.பி. 772(1) | பாவணையிலிருந்து அகற்றப்பட்டிருந்த மற்றும் சிதைவடைந்த 12 பண்ட விடயங்கள் தொடர்பாக 116 அலகுகள் பொதுக் களஞ்சிய வளாகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டு இருந்ததுடன் நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க அழிக்கப்பட வேண்டிய பண்டங்களை அழிப்பதற்கு அல்லது ஏலவிற்பனையின் மூலம் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 08 விடயங்கள் அகற்றப்பட்டுள்ளது எனவும், மீதியான விடயங்கள் 2024 கணிப்பீட்டின் பின்னர் ஏலவிற்பனை செய்வதற்கு அல்லது அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 66,721,653 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 45,788,643 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 9,050,000 | 13,187,823 | 11,809,409 | 4,050,616 | 7,847,400 | 4,069,966 | 3,571,612 | 2,672,202 |
| ii. | வாடகை | 8,750,000 | 9,806,191 | 10,211,861 | 1,054,005 | 8,036,590 | 4,200,221 | 3,887,151 | 1,459,675 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 3,022,000 | 1,629,910 | 1,629,910 | - | 2,392,000 | 559,750 | 559,750 | -- |
| iv. | ஏனைய வரு மானங்கள் | 24,950,000 | 21,595,198 | 21,759,358 | - | 6,857,000 | 2,023,707 | 20,141,627 | 164,160 |
| | | ------------ | ------------- | -------------- | -------------- | ------------- | -------------- | -------------- | -------------- |
| | | 45,772,000 | 46,219,122 | 45,410,538 | 5,104,621 | 25,132,990 | 29,053,644 | 28,160,140 | 4,296,037 |
| | | ======== | ======== | ======== | ======== | ======= | ======== | ======== | ========= |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருட ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 3,902,720 தொகை காணப்பட்டதுடன், 4190 வீதவரி அலகுகள் தொடர்பாக சிட்டையிடல் ரூபா 3,184,493 தொகையுடன் ரூபா 7,087,213 அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 2,916,741 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு 3191 வீதவரி அலகுகள் தொடர்பாக ரூபா 4,170,472 இற்கான நிலுவை வீதவரி ஒன்று காணப்பட்டது. | 2024 முதல் காலாண்டில் ரூபா 622,800 இற்கான தொகையொன்று அறவிடப்பட்டது எனவும் மீதி நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடமாடும் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான கடைவாடகை செலுத்தும் 117 கடையறைகள் காணப்பட்டதுடன் அவற்றில் 72 கடையறைகளில் இருந்து ரூபா 861,270 இற்கான நிலுவை வருமானம் ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. அவற்றில் 2 கடையறைகள் தொடர்பாக ரூபா 100,000 இனை விட மிகையான | ரூபா 100,000 இற்கு மிகையான நிலுவை மீதிகள் காணப்பட்ட 2 கடையறைகளில் இருந்து ரூபா 37,640 வீதம் மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது எனவும் மற்றும் மூடப்பட்டுள்ள | நிலுவை வருமானம் அறவீடு செய்தல் மற்றும் கடைகளை வாடகைக்கு கொடுத்தல் விரைவாக மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீதியொன்று காணப்பட்ட மூன்று வர்த்தக கட்டிடத் தொகுதியில் 21 கடையறைகள் பயன்படுத்தப்படாமல் மூடப்பட்டிருந்தது. | கடையறைகளில் 06 கடையறைகள் திறக்கப்பட்டுள்ளது என. | |
| (இ) | தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய இலக்கம் தபபா/பபாகொ/2010/01 இலக்கங் கொண்ட் சுற்றறிக்கைக்கு இணங்க இரண்டு வர்த்தக கட்டிடத் தொகுதிகளில் 20 கடையறைகளின் கடைவாடகையை பெறுமதி மதிப்பீட்டை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அந்த சுற்றறிக்கையின் 04 ஆம் பந்திக்கு இணங்க 03 கடையறைகள் வாடகைக்கு கொடுக்கும் போது அறவிடப்பட வேண்டிய ஒரே தடவையில் பெறும் பணம் ரூபா 102,500 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | வலஸ்கல பொதுச் சந்தையின் 05 கடையறைகளுக்காக பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்துள்ளது எனவும் ஒரே தடவையில் பெறும் பணத்திற்காக இறுதி அறிவித்தல் வாடகையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஈ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் நீதிமன்றத் தண்டப்பணம் என ரூபா 1,825,000 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 60,588,464 தொகை பெற வேண்டியிருந்தது. | நீதிமன்றத் தண்டப் பணத்திற்காக ரூபா 1,814,172 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 22,585,828 இற்கான தொகை 2024 ஏப்ரல் 30 திகதியளவில் கிடைத்திருந்தது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உக்கக் கூடிய குப்பைகளை சேகரித்து சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் அவற்றை மாதாந்த குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட தனியார் காணியொன்றில் அப்புறப்படுத்தப்படுகின்றது. | சேதனப் பசளை செயற்திட்டத்திற்கு பொருத்தமான காணி ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது எனவும், அதற்காக சுற்றாடல் பரிந்தரை பெற்றுக்கொண்ட பின்னர் முறையான சேதனப் பசளை செயற்திட்டம் ஒன்று செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | முறையான குப்பை முகாமைத்துவ முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 23 இற்கு இணங்க சபையின் 48 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 6 பிரிவுகள் தொடர்பாக பாதைகள், மதகுகள் மற்றும் பாலங்கள் இனங்காணப்பட்டு நிலஅளவை அலுவல்கள் பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதிலும் அந்த பாதைகளின் படம் வரைவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது சுமார் 30 பிரிவுகள் பட வரைபுகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மீதியான 18 பிரிவுகளும் விரைவாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | அதிகாரச் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதிகள் 212 இற்கு இணங்க 03 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 322,707 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த பண்டங்களை ஆவணப்படுத்தியிருக்கவில்லை. | தவறுதலாக களஞ்சியப் பெறுவனவு பதிவேட்டில் உட்படுத்துவதற்கு முடியாமல் போனது எனவும் எதிர்காலத்தில் அவ்வாறான தாமதகங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதிகள் 180 ஏற்பாடுகளுக்கு புறம்பாக சபையின் அலுவலக உதவி ஊழியர் ஒருவருக்கு 2021 மார்ச் 04 திகதி முதல் திக்வெல்ல வாராந்த சந்தையில் குத்தகை அறவீடு செய்யும் கடமைக்காக ரூபா 126,500 தொகை தரகுத் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | வருமானப் பரிசோதகரின் உதவிக்காக அலுவலக உதவியாளர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டது எனவும் பொதுச் சந்தை வாடகையின் தரகு தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரினால் வெளியிடப்பட்டுள்ள கடிதத்திற்கு இணங்க செயற்படுகின்றது என. | விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | சபையில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆரம்பதர தொழிலாளர்கள் 09 பேருக்கு பதவிக்கு குறித்தொதுக்கிய கடமைகள் சாட்டப்படாமல் கடமைகள் சாட்டப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 4,157,574 இற்கான தொகையொன்று சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட பதவிகளுக்கு சாட்டப்பட்ட கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பதவிக்குரிய கடமைகள் சாட்டப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 149 இற்கு இணங்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் இலங்கை | அறவிடப்பட வேண்டிய 1 சதவீத வரி அறவீடு செய்வதற்காக குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு கடிதங்கள் | அதிகாரச் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள 20 ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் தங்குமிடங்களிலிருந்து 2019 முதல் 2023 ஆண்டு வரை அறவிடப்பட வேண்டிய 1 சதவீத அனுமதிப்பத்திரக் கட்டணம் கணக்காய்வுத் திகதியாகிய 2023 திசெம்பர் 13 திகதியளவிலும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 08 ஹோட்டல்களில் இருந்து 2019 ஆண்டு முதல் 2023 வரையான காலப்பகுதி தொடர்பாக 1 சதவீதக் கட்டணம் ரூபா 890,226 தொகை குறைவாக அறவீடு செய்யப்பட்டிருந்தது. | அனுப்பப்பட்டுள்ளது எனவும் 19 நிறுவனங்களில் இருந்து வரித் தொகை செலுத்தப்பட்டிருந்தது என. | |
| (ஆ) | 2021 நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி கட்டளை/ பிரமாணங்கள் அடங்கிய 2021 ஜூலை 08 ஆந் திகதிய 2235/54 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரிவு 28(1) ஏற்பாடுகளுக்கு புறம்பாக புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த மற்றும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற 08 கட்டிடங்களுக்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றிருக்காததுடன் அந்த வர்த்தமானி அறிவித்தலில் 2 ஆவது அட்டவணைக்கு இணங்க வரைபுகள் அங்கீகரித்தல் மறுக்கப்பட்டிருந்த எனினும் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த 3 கட்டிட விண்ணப்பங்களுக்காக ரூபா 1,187,570 இற்கான கட்டணத்தை அறவீடு செய்து அந்த நிர்மாண வேலையை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை சட்டரீதியாக்கும் படி எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் கட்டிட வரைபுகளுக்காக சட்டரீதியான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட அணவல் அங்கீகாரத்திற்கான கட்டணம் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என. | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | இரண்டு மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்காக 2020 ஜூலை மாதம் அங்கீகாரம் வழங்கியிருந்த கட்டிட வரைபுக்கு இணக்கமற்ற முறையில் 172.4 சதுர மீற்றர்கள் அளவான 02 கட்டிடங்கள் மற்றும் 20.25 சதுர மீற்றர்களுக்கான பலகையாலான 02 குடிசைகள் மற்றும் 17 மீற்றர் நீளமான எல்லை மதிலும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதனை | சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட அணவல் அங்கீகாரத்திற்கான கட்டணம் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என. | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பரிசோதனை செய்து குறிப்பிட்ட தண்டப்பணத் தொகையை அறவீடு செய்வதற்கு முறைப்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஈ) | திக்வெல்ல அலுத்கொட தம்பகஸ்ஆர இல் அமைந்துள்ள நாரங்கஹஹேன துண்டுகளாக பிரிக்கப்பட்ட காணிக்காக சபையின் திட்டக் குழுவினால் வழங்கியிருந்த அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யாமல் 27 துண்டுகள் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், அதன் மீது அறவிடப்பட வேண்டிய 1 சதவீத கட்டணம் சபைக்கு அறவீடு செய்திருக்கவில்லை. | குறிப்பிட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்த பின்னர் காணியின் துணைப் பகிர்வு வரைபிற்காக அங்கீகாரம் வழங்கும் போது அங்கீகரிக்கப்பட்ட அணவல் கட்டணம் அறவீடு செய்வதற்கும், 1 சதவீத கட்டணம் அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என. | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | பம்பரந்தவில் அமைந்துள்ள வன்னிகெவத்த, கட்டடிகேவத்த, மெதகொடவத்த மீகந்தெஆரே கொரடுவ எனும் காணி 16 துண்டுகளாக (பாதைகள் மற்றும் வடிகால்கள் தவிர) துணைப் பகிர்வு செய்து விற்பனை செய்வதற்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தின் மூலம் விதிக்கப்பட்டிருந்த நிபந்தனைகளுக்கு இணங்க நிர்மாண வேலைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் அதாவது 2021 ஆகஸ்ட் 09 திகதி சிவில் பொறியியலாளர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன்படி முறையான தேடுதலொன்றின்றி போலியான பட்டய சிவில் பொறியியலாளர் அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 2021 ஆகஸ்ட் 04 திகதி தொழிநுட்ப சேவை உத்தயோகத்தரினால் வெளிக்களப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது எனவும் அங்கு குறிப்பிட்ட பாதைகள் மற்றும் வடிகால்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது எனவும் அவதானிக்கப்பட்டது. எனவும் அது தொடர்பாக ஏலவிற்பனையாளர்களிடம் வினவியபோது கொரோனா காலப் பகுதியில் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டது என வெளியிட்டிருந்தார் எனவும், அதற்குரிய பட்டய பொறியியலாளர் அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது எனவும் குறிப்பிட்டிருந்தார் என. | சரியான அறிக்கைகள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 16 துண்டுகளாக பகிரப்பட்ட லியன பதிரனகேகெதரவத்த எனும் காணியை துண்டுகளாக பகிர்வதற்கு முன்னர் நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனைகள் உள்ளடங்கிய அபிவிருத்தி அனுமதிப்பத்திர இலக்கம் 08 மற்றும் 10 இன் நிபந்தனைகளுக்கு புறம்பாக 2023 திசெம்பர் 13 திகதியளவில் இணக்க சான்றுகள் | 2021 திசெம்பர் 21 திகதிய திட்டக் குழுவின் தீர்மான இலக்கம் 09 மற்றும் 10 இன் கீழ் காணி துணைப் பகிர்வு இலக்கம் SD/2020/226 மற்றும் SD/2020/227 என்பவற்றுக்கு இணக்கச் | நிபந்தனைக்கு இணக்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக் கொள்ளாமல் 14 துண்டுகள் விற்கப்பட்டுள்ளதுடன் 03 துண்டுகளில் வதிவிடக் கட்டிடங்கள் 03 நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. | சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது என. | |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் சங்கத்தினால் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற மாநாட்டிடிற்காக சபையின் உத்தியோகத்தர்களுக்கு தேவையான போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்கு 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது ரூபா 203,200 தொகை வெளித்தரப்பினருக்கு சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | தென் மாகாண ஆளுனர் அலுவலகத்திலிருந்து அங்கீகாரம் கிடைத்திருந்தது என. | தாபனக் கோவை நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | பாதைப் பெயர் பலகைகளை தயாரித்து பொருத்துவதற்காக முறைசாரா விதமாக 09 வர்த்தக நிலையங்களிலிருந்து ரூபா 342,000 தொகை பெற்றிருந்தது என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அந்தப் பணம் சேகரிப்பதற்காக முறையான திட்டமொன்று, பெறுகை செய்முறை ஒன்று மற்றும் கணக்கீட்டு நடைமுறையொன்று கடைபிடித்திருக்கவில்லை. | குறிப்பிட்ட நிறுவனங்களினால் செலவுகள் மேற்கொள்ளப்பட்டு சபையினால் வழங்கப்பட்ட விபரக் குறிப்புகளின் படி பாதைப் பெயர் பலகைகள் தயாரிக்கப்பட்டு நன்கொடை ஒன்றாக எழுத்துமூலம் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நன்கொடைக்காக நன்றிநவிழல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என. | முறையான செய்முறை ஒன்று கடைபிடிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 செப்தெம்பர் 29 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு புறம்பாக சபை நிதியத்திலிருந்து ரூபா 1,316,723 தொகை பெறுமதியான 02 ஒப்பந்த வேலைகள் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் ஒன்றிற்கு சாட்டப்படுகின்றது என உணர்த்தி மற்றும் ஊழியர் ஒருவரினால் நிறைவேற்றப்பட்டு ரூபா 1,045,230 தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 2,777,087 இற்கான 02 ஒப்பந்த வேலைகள் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. | சமூக அபிவிருத்தி சங்கத்தினால் ஒப்பந்த வேலையை வேறு ஒருவருக்கு சாட்டுவதற்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கப்பட்டிருக்கவில்லை எனவும் தற்போது டென்டர் அழைக்கப்பட்டு ஒப்பந்த வேலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ரூபா 6,500,673 இற்கான மதிப்பீட்டு பெறுமதியைக் கொண்ட 08 செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்வதற்காக 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதி 177 மற்றும் 178 மற்றும் 2006 பெறுகை வழிகாட்டல் கோவை மற்றும் 2021 செப்தெம்பர் 29 ஆந் திகதிய இலக்கம் 01/2021 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிலிருந்து மாத்திரம் டென்டர்கள் அழைக்கப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிலிருந்து மாத்திரம் கூறுவிலைகள் அழைக்கப்பட்ட அனைத்து டென்டர்களும் இரத்துச் செய்யப்பட்டது எனவும் 2024 ஆண்டிற்குரிய டென்டர்தாரர்கள் பதிவு செய்த பின்னர் டென்டர் அழைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4.1 இற்கு இணங்க குறைந்த கூறுவிலைகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனங்கள் தெரிவு செய்யப்படாமல் கொள்திறன் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கு பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு தேவையான மண்டப வசதிகள் மற்றும் உணவு மற்றும் பானங்கள் பெற்றுக்கொள்வதற்காக கூட்டுத்தொகை ரூபா 144,500 இற்கான தொகையொன்று சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான பணம் செலுத்தி பயிற்சி வழங்கும் செயலமர்வுகளுக்காக பெறுகை வழிகாட்டல் கோவைகளுக்கு இணங்க குறைந்த கூறுவிலைகளின் அடிப்படையில் நிறுவனம் தெரிவு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையில் கடமையாற்றும் ஆரம்ப தர 09 தொழிலாளர்களுக்கு பதவிகளுக்குரிய கடமைகள் சாட்டப்படாமல் ஏனைய கடமைகள் சாட்டப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4,157,574 இற்கான தொகையொன்று சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட பதவிகளுக்குரிய கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பதவிக்குரிய குறிப்பிட்ட கடமைகள் சாட்டப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியளவில் சபையில கடமையாற்றிய, இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, சேவையை விட்டுச் சென்றுள்ள, ஓய்வுபெற்றுள்ள மற்றும் இறந்த 09 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 808,086 இற்கான கடன் மீதி பலவருட காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்டது. | தற்போது சிலரின் கடன் மீதிகள் தீர்க்கப்பட்டுள்ளது எனவும் ஏனைய கடன் மீதிகள் எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |